QIAMS

காயிதேமில்லத் சர்வதேச ஊடகக் கல்வி அகாடெமியில்

# "அரை நூற்றாண்டு கால வானொலி அனுபவங்கள்"

- ஒலி ஊடகத்தில் மொழியின் ஆளுமை -





அன்பு அறிவிப்பாளன்

## B.H. அப்துல் ஹமீத்

உடன் ஒரு சந்திப்பு.

டிசம்பர் 14, சனிக்கிழமை, காலை 11.00 - 12.30

இடம்: **QIAMS**, 82, ஸ்டெர்லிங் சாலை, சென்னை

தொலைபேசி: **044 4858 1896**

## அனைவரும் வருக!!

www.qiams.in

# பி.எச். அப்துல் ஹமீத்

உலகளவில் பிரபலமடைந்த இலங்கையைச் சார்ந்த சர்வதேச ஒலிபரப்பாளர்களில் தனக்கென ஒரு அங்கீகாரத்தையும், மதிப்பையும் உருவாக்கி வைத்திருப்பவர் திரு. பி. எச். அப்துல் ஹமீத். தனது பதினோராவது வயதில் இலங்கை வானொலியில் சிறுவர் மலரில் ஆரம்பித்த இவரது வானொலிப் பயணம், அத்துறையில் தன்னை மேலும் மேலும் மெருகேற்றிக் கொள்ள உதவியதோடு, தன்னுடைய 18-ஆவது வயதில் இளம் ஒலிபரப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் மிளிரச் செய்தது. இதனை அடுத்து அப்துல் ஹமீத் செய்திவாசிப்பாளராகவும், நேரடி நிகழ்வு ஒலிபரப்பாளராகவும், நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் உருவெடுத்தார்.

அவரது திறமையாலும் ஆர்வத்தாலும் பல்வேறு புதுமையான நிகழ்ச்சிகளை இலங்கை வானொலியில் பரீட்சார்த்த முறையாக செய்துபார்த்து அதில் வெற்றியும் பெற்றார். அவருடைய தன்னிகரற்ற பணியினைக் கௌரவிக்கும் விதமாக இரு முறை அவர் அதிபரின் விருதைப் (President’s Award) பெற்றிருக்கிறார். நெதர்லாந்து வானொலி பயிற்சியகத்தில் 3 நட்சத்திரங்கள் கொண்ட சான்றிதழைப் பெற்ற நபர் என்ற பெருமையும் அவரைச் சாரும்.

வெறும் வானொலியோடு நின்று விடாமல் நாடகம், கவிதை, தொலைக் காட்சி, திரைப்படம் என்று கலைத்துறையில் அவரது ஈடுபாடு விரிகிறது. அதிக அளவில் பொது நிகழ்வுகளிலும் தொலைக்காட்சித் தொடர்பான நிகழ்ச்சிகளிலும் அப்துல் ஹமீது சிறப்பு அழைப்பாளராக இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளுக்கு அழைக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டுள்ளார். இது மட்டுமல்லாமல் ஊடகம் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்கங்களை சிறப்புற நடத்தியிருக்கிறார்.